

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, வெள்ளையம்மாள்புரம் ஊராட்சி, அருங்குளம் ஊராட்சி, நமச்சிவாயபுரம் ஊராட்சி, சக்கம்மாள்புரம் ஊராட்சி, சிவஞானபுரம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மக்கள் களம் மக்களின் குறை கேட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விவசாயிகளுக்கு இடுபொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றியச் செயலாளர் அன்புராஜன், ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (30.10.2023) ஆணையர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, இந்து சமய அறநிலையத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 31 சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உள்ளனர்.

### விருதுநகர் மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.31-

**விருதுநகர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று இது குறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், வ.புதுப்பட்டி கிராமம் அருகில் இன்று (30-10-2023) மாலை வத்திராயிருப்பிலிருந்து வ.புதுப்பட்டி கிராமத்திற்கு அர்ச்சுனாபுரம் கிராமம் வழியாக மாதவராயன்குளம் கண்மாய் அருகில் சென்று கொண்டிருந்த சிற்றுந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையின் ஓரத்தில் உள்ள தென்னந்தோப்பில் கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் நந்தகுமார், (த/பெ. இருளப்பன்) மற்றும் பாண்டி (எ) தேவேந்திரன் த/பெ. சின்னப்பராஜ் ஆகிய இரு மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தின ருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பேச்சுப்போட்டி!

## அமைச்சர் ஆர்.காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைக்கின்றனர்! வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

திருவள்ளூர், அக்.31

திருவள்ளூர் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் நவீன தமிழ் நாட்டை கட்டமைத்த எங்களின் பொறியல் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொறியியல் பாலிடெக்னிக்கல் தொழிற்கல்வி மாணவ - மாணவியர்களுக்கான மாபெரும் பேச்சுப் போட்டி இன்று (31.10.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 09.00 மணியவில் சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாண்டூர் இந்திரா பொறியியல் கல்லூரியில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சி.சு.விஜயகுமார், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் கே.சத்தியராஜ் வரவேற்புரையாற்றுகிறார்கள். ஒன்றிய கழகச் செயலாளர் டி.கிறிஸ்டி (எ) அன்பரசு, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் கே.ஆர்.தேஜா, கே.லோகேஷ், ஆர்.பிரவின் குமார், சையத் முஸ்தாக், எம்.ஹரி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ராட்சகன் எம்.பி. ஆகியோர் மாபெரும் பேச்சுப்போட்டியை துவக்கி வைத்து சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்குகிறார்கள்.

இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி பொறியாளர் அணி மண்டல பொறுப்பாளர் இரா. நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ. நாகலிங்கம், இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஷ்வரி ரவீந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், கே. அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், திருத்தணி வி. வினோத்குமார், ஜி.ரவீந்திர, பா.ஆர்த்தி ரவி, பெ.பழனி, சி.என்.சண்முகம், சி.ஜெ. சீனிவாசன், எம்.ஜி.ஜோதிக் குமார், என்.கிருஷ்ணன், டி.ஆர்.கே.பாபு, பி.டி.சந்திரன், ஆர்.ஜெயசீலன் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் தட்சிணாமூர்த்தி, சதீஷ்குமார், உத்தம்சில்வா நன்றி கூறுகிறார்கள்.

### மாலத்தீவு கடலோரக் காவல் படையால்

# கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சந்தித்து தெரிவித்தார்!

தூத்துக்குடி, அக். 31 -

தூத்துக்குடி தருவைகுளத்தில், மாலத்தீவு கடலோரக் காவல்படை யினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்கள் மற்றும் விசைப்படகு உரிமையாளர் சங்கத்தினரை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். 12 மீனவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதியளித்தார்.

மாலத்தீவு சென்றுள்ள தமிழ்நாடு ஆழ்கடல் விசைப்படகு மீன்பிடி சங்கத் தலைவர் அந்தோணி ஜெயபாலனை தொலைப் பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு 12 மீனவர்களின் தற்போது நிலைமையைக் கேட்டு அறிந்தார்.

எல்லைத்தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி தூத்துக்குடி மீனவர்கள் 12 பேரை மாலத்தீவு கடற்படையினர் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது வலைதள பக்கத்தில் எனது தூத்துக்குடி தொகுதிக்குட்பட்ட தருவைகுளத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடி யில் ஈடுபட்டிருந்த போது மாலத்தீவு கடலோரக் காவல்படையினால் கைது செய்யப்பட்டிருப்பது மிகுந்த கவலை அளிக்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சகம் விரைந்து தலையிட்டு நமது மீனவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி தருவைகுளம் பகுதியிலிருந்து அதே பகுதியைச் சேர்ந்த மைக்கேல் பாக்கியராஜ் என்பவரது படகில், கடந்த செப்டம்பர் மாதம் 1ம் தேதி ஆழ்கடலுக்கு விக்னேஷ், உதயகுமார், மைக்கேல் ராஜ், செல்வசேகரன், அந்தோணி கிறிஸ்டோபர், பரலோக திரவியம், அன்பு, ஆதிநாராயணன், மகேஷ் குமார், மாதேஷ் குமார், மணி, சக்தி ஆகிய 12 பேர் மீன்பிடிக்கச் சென்றார்கள்.

இவர்கள் மீன்பிடித்து விட்டுக் கடந்த 23ம் தேதி மாலத்தீவு கடல் பகுதி வழியாகக் கரைக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த மாலத்தீவு கடற்படையினர், அத்து மீறி மாலத்தீவு கடல் பகுதிக்குள் நுழைந்ததாகக் கூறி, மீனவர்கள் 12 பேரையும் கைது செய்து, விசைப் படகையும் பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

மீனவர்களின் குடும்ப ங்களைச் சந்தித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆறுதல் கூறியபோது, ஒட்டப்பிடாரம் தொகுதி எம்.எல்.ஏ. சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி மன்றத் தலைவரும், தி.மு.க. ஒன்றிய செயலாளருமான இளையராஜா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் உடனிருந்தனர்.



மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில், நேற்று (30.10.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் நடைபெற்ற மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் – ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), எம்.பி. அமித், (தெற்கு) மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில்

# வாக்காளர் சரி பார்ப்பு முகாம்களுக்கு பொறுப்பாளர்கள் நியமனம்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு!

திருவள்ளூர், அக். 31 -

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசரின் அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 823 பாகங்களுக்கும் சிறப்பு முகாம் வருகிற நவம்பர் 4, 5 மற்றும் 18, 19 ஆகிய தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர், சேர்த்தல், நீக்கல் மற்றும் இடமாற்றம் குறித்து நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாமில் கீழ்கண்ட மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.



**ஆவடி சட்டமன்ற தொகுதி**

கழக நிர்வாகம், பூத், மாவட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர் விவரம் வருமாறு:-

ஆவடி கிழக்கு 75- மா. ராஜி, எம்.கார்த்திக், ஆவடி மேற்கு - 77 வார்டுகள் எஸ்.ஜெயபாலன், வழக்கறிஞர் ரமேஷ், ஆவடி வடக்கு 77 வார்டுகள், கே.ஜெ.ரமேஷ்இ, வழக்கறிஞர் அகஸ்டின்,

ஆவடி தெற்கு - 72 வார்டுகள், வி.ஜெ.சீனிவாசன் - வழக்கறிஞர் வே.கார்த்திக், திருவேற்காடு 77 வார்டுகள், த. எத்திராஜ், வழக்கறிஞர்ராஜ்குமார், திருநின்றவூர் - 40 வார்டுகள், பா. நரேஷ்குமார், வழக்கறிஞர் புனிதவ ராஜன், பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம்,18 வார்டுகள், சி.ஜெரால்டு, வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, மொத்த பூத்கள் 436

**பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி**

பூவிருந்தவல்லி நகரம், 57 வார்டுகள், கே.ஜெ. ரமேஷ்,.வழக்கறிஞர் எஸ். ராஜேந்திரன், பூவிருந்த வல்லி மேற்கு ஒன்றியம் 31 வார்டுகள்,
சி.ஜெரால்டு, வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, பூவிருந் தவல்லி கிழக்கு ஒன்றியம்- 96 வார்டுகள் முத்தமிழ் செல்வன் பாஸ் முருகன், திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம்- 68 வார்டுகள்
காஞ்சனா சுதாகர், கே.ஜி. அன்பு
திருவள்ளூர் மேற்கு ஒன்றியம்-55 வார்டுகள்
வி. குமார் பெ.வினோத்,
திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் 35 வார்டுகள் - ஜெ.மகாதேவன் -செந்தில் குமார், எல்லாபுரம் மத்திய ஒன்றியம்- வார்டுகள் 26
காயத்திரி ஸ்ரீதர் - துரை பழனி, திருமழிசை பேரூர் 19 ஜி.விமல் வர்சன் - பி.கே.இ. நாகராஜ், மொத்த பூத் 387

மேற்கண்ட பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்களுடன் இணைந்து இந்நாட்களில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ எனது தலைமையில், ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் பழ.கணேசன் உள்ளிட்டோர் இணைந்து திரு வள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளவர் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, நா.சந்திரபாபு, மிசா மதிவாணன், வி.ராமநாதன், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினர். கா.தாமரைச்செல்வன், கே.அங்குசாமி, வி. கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் ஆகியோர் வரவேற்றனர். இதில் வி. திராவிட வீரன், கா.சிவசங்கரன், அ.ராஜேந்திரன், பி.நிர்மல்குமார், நா.மோகன்குமார், பா.சந்திரன், கே.ராஜா, மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, கே.ஏழுமலை மற்றும் 700 க்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### மின்சார ரெயில் நிறுத்தம்

# சென்னையில் இன்று மெட்ரோ சேவை நீட்டிப்பு!

சென்னை, அக்.31-

சென்னையில் இன்று மின்சார ரெயில் சேவை நிறுத்தப்படுவதால் மெட்ரோ ரெயில்கள் கூடுதலாக இயக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

பராமரிப்பு பணிகள் காரணமாக தெற்கு ரெயில்வே சேவைகள் இன்று காலை 10.18 மணி முதல் மதியம் 14.45 மணி வரை மின்சார ரெயில் சேவை நிறுத்தப்படுகிறது. இதன் காரணமாக பயணிகள் பாதிக்கப்படுவதை குறைக்கும் நோக்கில், சென்னையில் மெட்ரோ ரெயில் சேவை கூடுதலாக இயக்கப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்
### அக்டோபர் 31 (1977)



**செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.**

**இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**